E ISSN: 2583-0880

# பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*

# Pandian Tamil Journal of Temple Studies

*A Peer-Reviewed Journal*

**மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2055**

Volume **- 5, Issue - 1, November 2024**

# பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
# Pandian Tamil Journal of Temple Studies


**பதிப்பாசிரியர்/Editor-in-Chief**

**முனைவர் கி. நாகேந்திரன்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** nagendran@srnmcollege.ac.in
editorptjts@pandianeducationaltrust.com

**Dr. K. Nagendran,**
Assistant Professor of Tamil,
Sri S. Ramasamy Naidu Memorial College,
Sattur, Virudhunagar District,
Tamil Nadu, India.
**Email:** nagendran@srnmcollege.ac.in
editorptjts@pandianeducationaltrust.com

**ஆசிரியர் குழு/Advisory Editorial Board**

**முனைவர் மோகன்தாஸ் @ ராமசாமி**
தலைவர் & இந்திய கலைத்துறை,
கலை & சமூக அறிவியல் துறை,
மலாயாப்பல்கலைக்கழகம், மலேசியா.
**மின்னஞ்சல்:** rmohana-dass@um.edu.my,

**Dr. Mohana Dass A/l Ramasamy,**
Head of the Department, Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya, Malaysia.
**Email:** rmohana-dass@um.edu.my,

**திரு. ந. சுபராஜ்,**
மூத்த விரிவுரையாளர் Gr.II, இந்து நாகரிகத்துறை,
மொழித் துறை, கலை கலாசாரப் பீடம்,
தென் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
**மின்னஞ்சல்:** subaraj84@seu.ac.lk

**Mr. N. Subaraj,**
Senior Lecturer Gr.II in Hindu Civilization,
Department of Languages, Faculty of Arts and Culture,
South Eastern University of Sri Lanka.
**Email:** subaraj84@seu.ac.lk

**முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்,**
பேராசிரியர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,
திருவனந்தபுரம் - 695034,
கேரளா, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeyakrishnan@keralauniversity.ac.in

**Dr. P. Jeyakrishnan,**
Professor, Department of Tamil,
University of Kerala,
Thiruvananthapuram – 695034,
Kerala, India.
**Email id:** jeyakrishnan@keralauniversity.ac.in

**முனைவர் கா. ஸ்ரீதர்,**
தமிழ்த்துறைத்தலைவர்,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி,
விருதுநகர்- 626001. தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** sridhar@vhnsnc.edu.in

**Dr. K. Srithar,**
Assistant Professor & Head,
VHNSN College,
Virudhunagar - 626001,
Tamil Nadu, India.
**Email:** sridhar@vhnsnc.edu.in

**முனைவர் சு. வினோத்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** vinodh_ts245@anjaconline.org

**Dr. S. Vinodh,**
Assistant Professor of Tamil,
Ayya Nadar Janaki Ammal College,
Sivakasi, Tamil Nadu, India
**Email:** vinodh_ts245@anjaconline.org

## இணைப் பதிப்பாசிரியர்கள்/Associate Editors'

**முனைவர் த. மகேஸ்வரி,**
பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்,
விருதுநகர் -626001.
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** president@pandianeducationaltrust.com

**Dr. D. Maheswari,**
Pandian Tamil Journal of Temple Studies,
Virudhunagar-626001.
Tamil Nadu, India.
**Email:** president@pandianeducationaltrust.com

**முனைவர் மா. வினோத்குமார்,**
தலைவர் & உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நாகலாபுரம், தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** vinothkumar@pandianeducationaltrust.com

**Dr. M. Vinoth Kumar,**
Head & Assistant Professor, Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thothukudi,
Tamil Nadu, India.
**Email:** vinothkumar@pandianeducationaltrust.com

## துணைப் பதிப்பாசிரியர்கள்/Assistant Editors'

**திருமதி புனிதா சுப்பிரமணியம்**
தலைமையாசிரியர்,
எஸ்.ஜே.கே.டி. லடாங் அல்லாகர்,
34800 ட்ராங் பெராக், மலேசியா.
**மின்னஞ்சல்:** punitha.su@moe.edu.my

**Ms. Punitha Subramaniam,**
Head Master,
SJKT Ladang Allagar,
34800 Trong, Perak,
Malaysia.
**Email:** punitha.su@moe.edu.my

**திருமதி டினோசா சுஜீந்தர்,**
துணை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணபல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம், இலங்கை.
**மின்னஞ்சல்:** dinosha14@hotmail.com

**Ms. Dinosha Sujindar,**
Assistant Professor,
Department of History,
University of Jaffna,
Sri Lanka.
**Email:** dinosha14@hotmail.com

**முனைவர் வே. அ. பழனியப்பன்,**
முதல்வர் (பொறுப்பு),
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேலச்சிவபுரி, புதுக்கோட்டை,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** arasupalani45@gmail.com

**Dr. V. A. Palaniappan,**
Principal (i/c) Assistant Professor,
Department of Tamil,
Ganesar Arts and Science College,
Melasivapuri, Pudhukkotai,
Tamil Nadu, India.
**Email:** arasupalani45@gmail.com

**முனைவர் ஜெ. கவிதா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jkavitha@psgrkcw.ac.in

**Dr. J. Kavitha,**
Assistant Professor of Tamil,
PSGR Krishnammal College for Women,
Coimbatore - 641004,
Tamilnadu, India.
**Email:** jkavitha@psgrkcw.ac.in

**திரு சு. குழந்தைவேல்,**
தலைவர் & உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,
கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேலச்சிவபுரி, புதுக்கோட்டை,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** english.kulandhai@gmail.com

**Mr. S. Kulandhaivel,**
Head & Assistant Professor,
Department of English,
Ganesar Arts and Science College,
Melasivapuri, Pudhukkotai,
Tamil Nadu, India.
**Email:** english.kulandhai@gmail.com

**முனைவர் போ. செந்தில்குமார்,**
உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி, சிவகங்கை-630003,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** skbosesk@gmail.com

**Dr. B. Senthil Kumar,**
Assistant Professor, Department of English,
Alagappa Govt. Arts College,
Karaikudi, Sivaganga-630003,
Tamil Nadu, India.
**Email:** skbosesk@gmail.com

## Title Verso

**Journal title** : **Pandian Tamil Journal of Temple Studies (E ISSN: 2583-0880)**
**Editor Name** : **Dr. K. Nagendran**
**Publication frequency** : **November and May**
**Volume/Issue** : **Volume 5 Issue 1**
**Place of Publication** : **Virudhunagar**
**Date of Publication** : **November 2024**
**Paper Size** : **Digital A4 Size**
**Medium of Publication: E-version**
**Access Type (URL or DOI): Gold OA, Online, Indexed long time in Internet Archive**
**Subscription Type** : **APC**
**Publisher** : **Pandian Educational Trust**
**Publisher Website** : **https://pandianeducationaltrust.com/**
**Journal Site** : **https://tinyurl.com/yc3sm4wn**

**Pandian Educational Trust supports Sustainable Development Goals and is a member of UN SDG Publishers compact.**

# PUBLISHER'S MESSAGE

## Aim & Objectives

**Pandian Tamil Journal of Temple Studies is *a Peer-Reviewed Journal* (E ISSN: 2583-0880)**published twice in a year on November and May, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. **Pandian Tamil Journal of Temple Studies** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Temple Studies. Research through this academic medium motivates in all aspects of main and inter-disciplines of the core area of study with authentic e-publication. Making Internationalization of Temple Studies in the globalized world aids the scholarly community to gather knowledge on Temple arts, architecture, and the related fields to it. The impudence and revelation of academic research on internet could foster green printing and open access nature in the domain research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of culture and tradition and the unification of the people in our world. In achieving the aim, our journal **Pandian Tamil Journal of Temple Studies** has been created**.**

## Disclaimer

**Pandian Tamil Journal of Temple Studies** is committed to research Ethics and consider plagiarism as a crime done to the original author. So, the authors are advised to follow academic ethics with respect to acknowledgment of quotations from other scholarly works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions must be original, must accompany the declaration form stating the research paper as an original work, and has not been published elsewhere for any academic or research purpose. The contributor will be liable for such lapses on any legal issues and publication ethics. **Contact:** int.jou.oftemplestudies@gmail.com editorptjts@pandianeducationaltrust.com for submission and other information. For Institutional Subscription contact the publisher.

## Message from the Editor-in-Chief

**Pandian Tamil Journal of Temple Studies** is a Peer Reviewed Journal which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas in the field of Temple studies. Research is to establish, substantiate facts, and restate previous works and to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal to bring down scholarly articles to the academic world of Temple Arts and Architecture in this Volume 5, Issue 1, November 2024.


**PUBLISHER: Maheswari Publishers,**
(The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN32D0026797)
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556

**Mail:** int.jou.oftemplestudies@gmail.com or editorptjts@pandianeducationaltrust.com



**Copyright © 2024 – Authors'**

PTJTS is an Open Access journal and the Pdf copy can be reused within the terms of the CC BY license https://creativecommons.org/licenses/by/4.0/. Think before you print so that you can save trees and environment.

**Image 1. Brihadisvara Temple, Thanjavur**

**Image 2. Brihadisvara Temple, Thanjavur**

**References**

[1] Brihadisvara Temple, Thanjavur. (2022, November 6). In *Wikipedia*. https://en.wikipedia.org/wiki/Brihadisvara_Temple,_Thanjavur Accessed on 20.11.2022.

[2] Brihadisvara Temple, Thanjavur. (2022, November 6). In *Wikipedia*. https://en.wikipedia.org/wiki/Brihadisvara_Temple,_Thanjavur Accessed on 20.11.2022.

# பொருளடக்கம் / Contents


| வ.எண் S.No | தலைப்பு / பெயர் Title / Author Name | பக்க எண் Page No |
|---|---|---|
| 1. | பழமை வாய்ந்த பாலமுருகன் கோவில்<br>**Ancient Balamurugan Temple**<br>முனைவர் நா. குமாரி / **Dr. N. Kumari** | 1-14 |
| 2. | சோழபுரம் விக்கிரம பாண்டீஸ்வரர் கோயில் கட்டடக்கலையும் கல்வெட்டுச் செய்தியும்<br>**Architecture and Epigraphy of Cholapuram Vikrama Pandeeswarar Temple**<br>முனைவர் பா. தமிழரசி / **Dr. P. Thamilarasi** | 15-26 |
| 3. | தமிழ் இலக்கியங்களில் திருப்பரங்குன்றம்<br>**Thirupparankundram in Tamil Literature**<br>முனைவர் பீ. பெரியசாமி / **Dr. B. Periyaswamy** | 27-34 |
| 4. | நாட்டார் வழிபாட்டில் தெய்வங்கள்<br>**Deities in Folk Worship**<br>வா. மெரினா மஜு / **V. Merina Maju**<br>முனைவர் A. பொன்னம்மாள் / **Dr. A. Ponnammal** | 35-42 |
| 5. | ***Nāyikās* Love and its Stages in Cēramān Perumāl Nāyanār's *Kayilāya GÑāna Ulā* in the Perspective of *Saiva Tirumurai***<br>**K. Vadivelou**<br>**Dr. Saju George** | 43-48 |

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**

*A Peer-Reviewed Journal*

**Volume 5, Issue 1, November 2024** **E-ISSN: 2583-0880**

# Ancient Balamurugan Temple

**Dr. N. Kumari,** Assistant Professor of Tamil, Auxilium College, Vellore, Tamil Nadu, India.

**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**

**DOI: 10.5281/zenodo.14498259**

## Abstract

*The Lord is omnipresent and he is respected through the mantras and rituals. The Shiva yogis who appear in the temple await His grace. The saints often say that the forms of illusion are the form of the Lord - if they are present, they become the source of HIS grace. Therefore, it is vital to understand that temple worship is very important in Tamil culture. The temple is called as 'Aalayam'. The word can be divided into Aa + layam. The syllable 'Aa' means soul and 'Layam' means the place where the soul of God is present. 'Aa' also means the place where the soul of God is present. And Layam means the place where the soul of God is present. Therefore, the temple is also called the place where the soul of God is present. This is also called a temple. Ko - God Il - Abode. Kovil - Abode of God. It means worship of God. The purpose of this article is to study the very ancient Ratnagiri Balamurugan Temple.*

**Keywords:** Temple, Meinjnanam, Kolagiri, Fifth Force, Season of Enlightenment.

## References

[1] Ma. Jayasenthilnathan. *Devara Vaipputh Thalangal*. Varthamanan Pathippagam, Chennai, 2009.
[2] Pulawar Senturai Muthu. *Murugan Thalangal*. Pari Nilaiyam, Chennai, 2007.
[3] Thanikaimani Sengalvarayan Pillai. *Tiruppugal Urai*. Kazhaga veliyetu, Chennai, 2000.
[4] Siva. V. Kannappan. *Panniru Thirumurai Thirattu.* Kazhaga veliyetu, Chennai, 1990.
[5] C. Kulandaivel. *Urum Perum*. Chennai, 2008.
[6] Hultzsch.(edt.) *Epigraphia Indica*, vol-4, Archaeological Department of India, 1896-97.
[7] Kanimozhi Chelathurai. "Murugan Valipattu Muraigal." *Thinai Quarterly Journal*, ISSN: 2347 - 3533, December 2022.
[8] Dr. Vigneswari. "Minor Deities and Rituals in Hindu Cultural Tradition." *Aran International Journal*, ISSN: 2582 - 399X, June 2020.
[9] Dr. P. Jayaraj. "Arunakiriyarin Arul Aram." *SANLAX International Journal of Tamil Studies*, ISSN: 2454-3993, March 2018.
[10] Dr. K. R. Kamala Murugan. "Thirumurugatruppadai Koorum Muruga Valibadu." *MJSSH Online Journal*, ISSN: 2590-3691, April 2022.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 5, Issue 1, November 2024** **E-ISSN: 2583-0880**

# பழமை வாய்ந்த பாலமுருகன் கோவில்

**முனைவர் நா. குமாரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**
**DOI: 10.5281/zenodo.14498259**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்கள் இயற்கையோடு இணைந்து இயற்கையில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கையிலும் இயற்கைக்கேற்ற மாறுதல்களைச் செய்தனர். அங்ஙனம் தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்கு இயற்கையையொட்டியே ஆலயம் அமைத்தனர். கடவுள் திருவடி ஆன்மா லயிப்பதற்குரிய இடம் எனப் பொருள் கூறலாம். அதனால் தான் ஔவையார் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார். அவ்வகையில் அனைவரும் சென்று வழிபடுகின்ற மிகவும் பழமை வாய்ந்த இரத்தினகிரி பாலமுருகன் கோவில் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** ஆலயம், மெய்ஞானம், கோலகிரி , ஐந்தாம் படை, ஞானப் பருவம்.

**முன்னுரை**

இறைவன் எங்கு நிறைந்திருந்தாலும் (மந்திரம், பாவனை கிரியைகளால்) அவனருள் ஆலயத்தில் விளங்கித் தோன்றும் சிவஞான யோகிகளும், "மாயை காரிய உருக்களும் எம்பிரான் வடிவம் - ஆயவேல் அவை அருள் மயமாகும்" என்றருளினார். எனவே ஆலய வழிபாடு மிக அவசியம் என்பது உணரப்படும். ஆலயம் என்பதை ஆ லயம் என பிரிக்கலாம். "ஆ" என்பதற்கு ஆன்மா என்று பொருள். லயம் என்பதற்கு லயமாவதற்கு அல்லது சேர்வதற்குரிய இடம் என்பது பொருள். ஆகவே கடவுள் திருவடி ஆன்மா லயிப்பதற்குரிய இடம் எனப் பொருள் கூறலாம். ஆ என்பது ஆணவ மலத்தையும், லயம் என்பது அடங்கி இருத்தலையும் குறிக்கும். அதனால் ஆலயம் ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் எனவும் கூறுவர். இதனைக் கோவில் எனவும் கூறுவர். கோ - கடவுள் இல் - தங்குமிடம் . கோவில் - கடவுள் தங்குமிடம் என்றும் பொருள். இறை வழிபாடு என்று பொருள்படும் . மிகவும் பழமை வாய்ந்த இரத்தினகிரி பாலமுருகன் கோவில் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பாலமுருகன் கோவில்**

தமிழர்கள் இயற்கையோடு இணைந்து இயற்கையில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கையிலும் இயற்கைக்கேற்ற மாறுதல்களைச் செய்தனர். அங்ஙனம் தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்கு இயற்கையையொட்டியே ஆலயம் அமைத்தனர். அதனால் தான்

ஔவையார் **'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'** என்றார். அதனால் தான் மெய் கண்ட தேவ நாயனார், 'ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்று பாடியருளினார். பசுவின் உடம்பெல்லாம் பால் வியாபித்திருந்தாலும் அதன் மடி வழியாகவே நமக்கு பால் கிடைக்கிறது. அதுபோல், **"இறைவன் எங்கு வியாபித்திருந்தாலும் ஆலயங்களிலுள்ள மூர்த்திகளின் வழியாகவே அருளை சுரக்கிறான்." (கனிமொழி செல்லத்துரை, பக். 49)** அதனால், ஆலயம் என்பது வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது என்பது புலனாகிறது.

இக்கோயில் இரத்தினகிரிக் குன்றின் மீது கிழக்கு நோக்கியவாறு உள்ளது. இங்கு நான்கு கால வழிபாடு சோழியப் பிராமணரால் நடத்தப்படுகிறது. கிருத்திகைகள், சஷ்டி, கார்த்திகை விளக்கீடு முதலிய நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. இரத்தினகிரியில் "தமிழ் வழிபாடு' முறையை நடைமுறைப்படுத்திய பெருமை அக்கோயிலை நிர்வகிக்கும் பாலமுருகனடிமை சுவாமிகளையே சாரும். இக்கோயிலுக்குள் சென்றால் கற்பக விநாயகரை வழிபடலாம். இம்மலைக்கோயிலில் எழுந்தருளித் திருவருள் புரியும் பாலமுருகப் பெருமானுக்கு, ஆடி மாதம் பெருவிழாச் சிறப்பாக நடைபெறுகிறது. சுவாமிகள் பாலமுருகப் பெருமானிடம் வந்து மெய்ஞானம் அடைந்தது. 1968ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20ஆம் நாள். அந்த நாள், ஆண்டுதோறும் நினைவு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**படம். 1 - 1968ஆம் ஆண்டு இரத்தினகிரி பாலமுருகன் கோவில்**

**படம். 2 - கீழ்மின்னல் இரத்தினகிரிக் கோயில் கோபுரம் இரவு நேரத்தில்**

இத்தலத்து ஊர் கீழ்மின்னல் என்னும் சிறிய கிராமம். இக்கிராமத்தின் அருகில் சிறிய மலை. இம்மலையே அழகன் முருகன் - பாலமுருகன் - அருள்மணக்கும் இரத்தினகிரியாகும்.

**படம். 3 - இரத்தினகிரி பாலமுருகன் சுவாமி வள்ளி தெய்வானையுடன் பால் அபிஷேக காட்சி**

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**படம். 4 - இரத்தினகிரி பாலமுருகன் சுவாமி வள்ளி தெய்வானையுடன்**

உள்ளொளிக் காட்டி உவப்பூட்டும் இரத்தினமாகப் பாலமுருகன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். நாடி வரும் அன்பர்கட்குத் துன்பத்தை அளித்தறியாத கந்த பெருமான், அண்மையில் நின்றருள வேண்டும் என்னும் நோக்கத்துடன், சாலையின் ஓரத்திலேயே கோலகிரியாகிய இரத்தினகிரியில் கோயில் கொண்டு அருளாட்சிப் புரிகின்றார்.

> **இரத்தினம் புறக்கண்ணுக்கு ஒளியைத் தருவது. இரத்தினகிரி அகக் கண்ணுக்கு ஒளியைத் தருவது. இரத்தினகிரித் தலம், அகக்கண், புறக்கண் ஆகிய இருவகைக் கண்களுக்கும் பேரொளியை வழங்குகிறது. (புலவர் செந்துறை முத்து, முருகன் தலங்கள் 33, ப. 88)**

என உரைப்பதன் மூலம் இத்தலத்தின் சிறப்பை அறியலாம். இத்தலம் பழமைச் சிறப்புடைய சமய ஈடுபாட்டுடைய தலமாகும். அருட் சிறப்பால் புகழ்ப்பெற்று விளங்கும் இத்தலம் சமயநெறிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**இலக்கியத்தில் வாட்போக்கி எனப்படும் இரத்தினகிரி**

ஆறுமுகப் பரம்பொருளின் ஐந்தாம் படை வீட்டுத் தலங்களுள் இரத்தினகிரித் தலமும் ஒன்று. குன்றுதோறும் நின்றாடும் குமரக் கடவுளின் திருத்தல வரிசையில் இரத்தினகிரித் தலம் தனியிடம் பெற்று விளங்குகிறது. உள்ளொளி காட்டி உவப்பூட்டும் இரத்தினமாக விளங்கும் இப்பாலமுருகன் கோயிலைப் பாலமுருகன் அடிமை சுவாமிகள் என்பவர் போற்றிப் பாதுகாத்து வருகின்றார். இத்தலம் 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட திருத்தலமாகும். இத்தலம்

பாலமுருகனாலேயே பராமரிக்கப்பட்டு வருவதால் இத்தலத்தில் முருகன் அருள் மணமும், புகழ் மணமும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. பழமைச் சிறப்புடையதேயாயினும், அண்மைக் காலமாக அருட்சிறப்பால் புகழ்பெற்று விளங்குகின்றது. பழங்காலத்தில் இம்மலைத் தலத்தை "மோர்க்குளத்து மலை' என்னும் பெயரால் வழங்கி வந்துள்ளனர். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் வந்து சென்றுள்ளதால் இக்கோயில் பாடல் பெற்ற தலமாகத் திகழ்கிறது. இத்தலம் பற்றி,

**பக்தியால் யானுனைப் பலகாலும்**
**பற்றியே மாதிருப் புகழ்பாடி**
**முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்**
**முத்தியே சேர்வதற் கருள்வாயே;**
**உத்தமா தானசற் குணர்நேயா**
**ஒப்பிலா மாமணிக் கிரிவாசா;**
**வித்தகா ஞானசத் திநிபாதா**
**வெற்றி வேலாயுதப் பெருமானே (திருப்புகழ் உரை, ப. 382)**

இதன் வழி, பக்தியைப் பூண்டு உன்னைப் பல நாட்கள் பற்றி சிறந்த உனது திருப்புகழ்களைப் பாடி, பெருவாழ்வாகிய முக்தி நிலை சேர்வதற்கு அருள்புரிவாயாக உத்தமனே என்றும் ஈகைக் குணம் உடைய நற்குணத்தவர்களுக்கு நேசனே, ஒப்பில்லாத சிறந்த மணிக்கிரி (இரத்தினகிரி) வாசனே என்றும் புகழ்வர். மேலும், வித்தகா! ஞானப்பருவம் அடைந்தவர்க்கு அருளைச் சக்தியாய் பதிக்கின்றவனே! வெற்றி வேலாயுதத்தை ஏந்தும் பெருமானே! என்று திருத்தலத்தையும் அதில் குடிக்கொண்டிருக்கும் முருகப் பெருமானையும் போற்றிப் புகழ்கிறார். தமிழ்க் கடவுளான முருகன் மற்ற இடங்களை விட அதிகமாக வேலூரில் கொண்டாடப்படுகிறான். அவன் புராணத்தை 'ஸ்காந்தம்' என்னும் வடமொழி நூல் தாம் நமக்கு விளக்குகிறது. அதைத் தமிழாக்கம் செய்ய வேண்டி மெய்யடியார் கச்சியம்பதி கச்சியப்பர் கனவில் தோன்றிய இவ்வழகன், முதல் இரு அடிகளை எடுத்துக் கொடுத்து தமது புகழ் என்றென்றும் இந்த தென்னகத்தில் தழைத்தோங்கி நிற்க வழிவகுத்துக் கொண்டிருக்கிறார்.

கச்சியப்பர் பின்னர் வந்த முருகனடியார்கள் அனைவருக்கும் வழிகாட்டியாகக் கந்தபுராணத்தை அமைத்துக் கொடுத்துள்ளார். கந்தபுராணம் தலத்துக்குத் தலம் வேறுபட்டது அல்ல. பொதுவாகத் தல புராணங்கள் எல்லாமே பதினெண் புராணங்களிலிருந்து தோன்றிய பக்தி மணம் கமழும் கதைகள்தாம். ஆனால், தலத்திற்குத் தலம் வேறுபட்டதாகவும், கதை அம்சம் நிறைந்தவையாகவும் இருப்பது முருகன் புராணம் ஒன்றேதான். அவனுடைய அவதார மகிமை, அதன் அவசியம், அதன் சிறப்பு, அதன் முடிவு ஆகிய இந்நான்கு முக்கிய கூறுகளைத்

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

தான் முருகன் கோயிலை வழிபடும்போதெல்லாம் அடியார் மனம் எண்ணிப் பார்த்துப் பரவசம் அடையும். அறுபடை வீடுகளில் காண்பவனும் அவன் சரிதையும் தான் இரத்தினகிரி பாலமுருகனுடையதும் ஆகும். வாட்போக்கியில் குடியிருக்கும் முருகப் பெருமானின் அழகிய தோற்றத்தையும் தலத்தையும் பன்னிருதிருமுறைகளில் ஒன்றான ஐந்தாம் திருமுறையில்,

**கால பாசம் பிடித்தெழு தூதுவர்**
**பாலகர் விருத்தர் பழையா ரெனார்**
**ஆல நிழல மர்ந்தவாட் போக்கியார்**
**சீலமார்ந்தவர் செம்மை யுணிற்பரே (பன்னிரு திருமுறைத் திரட்டு, ப. 40)**

ஆலமர நிழலில் அமர்ந்து இருப்பவரும் செம்மையுறக் காட்சியளிப்பவரும் வாட்போக்கியில் குடி கொண்டவனுமான முருகப் பெருமானே எனத் தலத்தையும் முருகனையும் இணைத்துப் பாடியுள்ளார் திருநாவுக்கரசு சுவாமிகள். **'இளமை, மணம், அழகு , கடவுள் தன்மை ஆகிய எல்லாம் ஒருங்கிணைந்த வடிவம் முருகனுடையது' (முனைவர் ப. ஜெயராஜ், பக். 4)** அண்ட சராசரங்கள் அனைத்தும் பரிபாலனம் செய்யும் பரமனின் செல்வக்குமாரன் இந்த இரத்தினகிரிக் கோயிலுக்கு வரும் அடியார்களின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து அவர்களை மனம் நெகிழச் செய்கிறான்.

**ஒளியின் நிழலில் இரத்தினகிரி**

இரத்தினகிரி என்றதும் இரத்தினத்தின் ஒளி கண்ணைப் பறிக்க ஒளிவீசும் மலையே தோன்றுகிறது. மலையில் வாசம் செய்யும் மணி (சுப்பிரமணி)யும் ஒளி வீசுகிறது. இரத்தினமும் அதன் ஒளியும், கடலும் அதன் அலையும் போல இங்கே பேதம் இல்லை. அதுவே இது - இதுவே அது. முழுமை, பூர்ணமுழுமை, சச்சிதானந்தம் அதனால் எப்போதும் எங்கும் வியாபித்து நிற்கும் ப்ரும்மத்துக்கு நேரம் காலம் எப்படி கிடையாதோ, அப்படியே ஒரு ஆகமம், நியமம், விதி, முறை, காலம் எதுவும் கிடையாது. இத்தத்துவத்தை உணர்ந்து இறைவனுடைய திருவடியைப் பெற வாட்போக்கி எனப்படும் இரத்தினகிரியில் வீற்றிருக்கும் முருகனை வணங்கினால் இன்பம் பெற்றுத் துன்பங்களை நீக்கலாம் என அருணகிரியார் தம் திருப்புகழில் கூறுகையில்,

**சுற்றகப டோடுபல சூதுவினை யான பல**
**கற்றகள வோடுபழி காரர்கொலை காரர்சலி**
**சுற்றவிழ லானபழி ஷோடுகடல் மூழ்கிவரு துயர் மேவித்**
**துக்கசமு சாரவலை மீனதென கூழில்விழு**
**செத்தை யென மூளுமொரு தீயில்மெழு கான வுடல்**
**சுத்தமறி யாதபறி காயமதில் மேவிவரு பொறியாலே;**
**எத்தியொரு மானைதினை காவல்வல பூவைதனை**

**சித்தமலை காமுகக காநமசி வாயனொடு**

**ரத்நகிரி வாழ்முருக னேயிளைய வாவமரர் பெருமாளே (திருப்புகழ் உரை, பா. 348, பாகம்-2, ப. 378)**

என்று இக்கோயிலுக்குச் சென்று வழிபடுபவருக்கு நிகழும் துன்பங்களைக் களையக்கூடிய மற்றும் மனதை சரி செய்யும் சிவபிரானோடு, இரத்தினகிரி எனப்படும் வாட்போக்கி தலத்தில் வாழும் முருகனே! என்றும் இளையவனே! தேவர் பெருமானே என்று திருவடியைப் பெற இவ்வாறெல்லாம் வேண்டுகிறார். இப்படி வேண்டும்போது இறைவனை அடைவதோடு, நற்பேற்றினையும் பெறலாம்.

**இரத்தினகிரியும் மண்டபப் பொலிவு**

படிமண்டபத்திலிருந்து மலைக்கோயிலுக்குச் செல்வது மிகுந்த தெய்வீகப் பயணமாகும். அன்பர்கள் இடையில் இளைப்பாற இரண்டு மண்டபங்கள் உள்ளன. தென்பாகத்தில் கல்யாண மண்டபமும், வடக்கில் சொற்பொழிவு மண்டபமும் உள்ளன. இளைப்பாறு மண்டபங்கள் மலைக் கோயிலில் உள்ள முருகனின் இன்னருளைச் சுரப்பன. இம்மண்டபங்கள் கலைநயம் கொண்டதாகவும் பெருமையுடையதாகவும் விளங்குகின்றன. கிரிவலம் வரும் வழியில் படி மண்டபம் அமைந்துள்ளது. உலகத்தில் நல்லோர்களைக் காத்தலின் பொருட்டு, சக்தி எடுத்த பல அவதாரத் தோற்றங்கள் இங்கு உள்ளன. இம்மண்டபத்தில் இடப்புறம் 16 கால் மண்டபமும், வெளிச்சுவரின் தென்மேற்கே சந்திரசேகர் திருக்கல்யாண மண்டபமும் இம்மண்டபத்தின் வலது பக்கத்தில் நீராழி மண்டபமும், வெளிச்சுவரின் தென்மேற்கே சந்திரசேகர திருக்கல்யாண மண்டபமும் காணப்படுகின்றன. மண்டபத்தின் முகப்பில் குதிரைகள் ஓடுவது போல சிற்பங்கள் உள்ளன. வடக்குபுறமாக நடன மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் விழாக் காலங்களில் மகளிர் நடனமாடுவர். அதன் பக்கத்தில் நூற்றுக்கால் மண்டபம் அமைந்திருக்கிறது.

**படம். 5 - விழாக் காலங்களில் நூற்றுக்கால் மண்டபம்**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**இரத்தினகிரி கோயிலின் கருவறையமைப்பு**

கருவறையில் பாலமுருகப் பெருமான் கரத்தில் வேலேந்தி, வள்ளி தெய்வானையுடன் காட்சியருகின்றார். அவருக்கு முன்னதாகக் கருவறையில் பெரிய வேல் ஒன்றும் காட்சியருளுகின்றது. கருவறையின் மேல் சுதைச் சிற்பங்களோடு அழகிய கோபுரம் அமையப் பெற்றுள்ளது.

**படம். 6 - கருவறையில் பாலமுருகப் பெருமான் வேலேந்தி வள்ளி தெய்வானையுடன் காட்சியளிக்கிறார்**

முருகன் இக்கோயிலில் இரு கோலங்களில் காட்சி தருகிறார். ஒன்று வள்ளி தெய்வானையுடன் உள்ள திருக்கோலம் மற்றொன்று குருகோலம் ஆகும். கிரானைட் கற்கலால் அமைக்கப்பட்ட தேரின் மீது சிலை நிறுவப்பட்டுள்ளது. சோழர்கால சிற்பக்கலை வடிவில் கற்பக்கிரகம் கிரானைட் கற்கலால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் சுற்றுச் சுவர்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்கை மற்றும் சண்டிகேஸ்வரர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. விநாயகருக்கு தரைப்பகுதியில் ஒன்றும் மலை உச்சியில் ஒன்றும் என இரு கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் 14-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் கட்டப்பட்டு, 1980-ஆம் ஆண்டில் 'பாலமுருகனடிமை சுவாமி' என்பவரால் புணரமைக்கப்பட்டது. இத்திருக்கோயில் அர்ச்சனைகள் அனைத்தும் தமிழில்

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

செய்யப்படுகின்றன. இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**அமைவிடம்**

இரத்தினகிரி. வேலூருக்கு 15.கிமீ முன்பாகவும் இத்தலம் கீழ்மின்னல் எனும் கிராமத்தில் அமைந்திருக்கிறது. மூலவர் பாலமுருகன். உற்சவர்: சண்முகர். அவரது சன்னிதி கல்லில் தேர் போல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தல தீர்த்தமான ஆறுமுக தெப்பம், அறுங்கோண வடிவில் பிரம்மாண்டமான தெப்பக்குளம் கட்டுமாணப்பணியில் உள்ளது.

**பாலமுருகனடிமை**

60 வருடங்களுக்கு முன்னால் இக்கோவில் அத்துணைப் பிரசித்தியில்லை. வசதிகளும் இல்லாதிருந்தது. 1960ல் முருகன் தன்னுடைய திருவிளையாடல் மூலம் அவரைத் தேர்ந்தெடுத்தான். ஆம், அவ்வருடம் ஒரு அரசு ஊழியர் படியேறி முருகனைத் தரிசிக்கப் போனார். அர்ச்சகரிடம் கற்பூரம் காட்டச் சொன்னார்; அர்ச்சகர் கற்பூரம் இல்லையென்று சொல்ல 'ஊதுபத்தியாவது காட்டுங்கள்' என்றார் பக்தர். அதுவும் இல்லையென அர்ச்சகர் சொல்ல 'முருகா… உனக்கே இக்கதியா?' என்று புலம்பி மூர்ச்சையுற்றார் பக்தர். முருகன் அவர் உள்ளத்துள் பிரசன்னமானார். அவரை ஆட்கொண்டார்.

**படம். 7 - 1968ஆம் ஆண்டு இரத்தினகிரி பாலமுருகன் கோவிலில் பாலமுருகன் அடிமை சுவாமிகள்**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**படம். 8 - முக்தி நிலையில் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்**

பின்னர் எழுந்தமர்ந்த அவர் பின்னால் பாலமுருகனடிமை என்றழைக்கப்பட்டவர். கோவில் திருப்பணியே இனி முதல் பணி' என்று மணலில் எழுதிக்காட்டினார். அன்று முதல் பேசுவதையே நிறுத்தி விட்டார். தன் அரசுப் பணி துறந்து இறைபணியில் புகுந்தார். அவரது முயற்சியால் முருகன் தனக்கென்று ஒரு கோவில் அமைத்துக் கொண்டான்.

**கந்தசஷ்டி**

இங்குள்ள மூலவர் பாலமுருகன் என்பதனால் இங்கு கந்தசஷ்டியின் போது சூரசம்ஹாரம் நடப்பது இல்லை. இரவில் அர்த்தஜாம பூஜையில் அவருக்குப் பாலை நிவேதனமாகப் படைக்கின்றனர்.

**துர்க்கை**

கோவிலின் அடிவாரத்தில் துர்க்கைக்குத் தனிக் கோவில் உள்ளது. நூற்றுச் சொச்ச படிகள் ஏறிச் சென்றால் முருகன் கோவிலை அடைந்து விடலாம். மோட்டார் வாகனங்கள் மேலேறிச் செல்லவும் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

**கற்பக விநாயகர்**

மலையில் உள்ள கோவிலினுள் கற்பக விநாயகர் சன்னிதி உள்ளது. வராஹிக்கு தனிச் சன்னிதி உள்ளது.

“இரத்தினகிரி” – என்ற சொல் என்பது

**1. அடைக்கலம்**

**2. எனது அனுபவம்**

**3. அதுவே ஒரு மகத்தான உண்மை.**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**குழந்தை பாக்கியம் அருளும் ரத்தினகிரி பாலமுருகன் கோவில்**

பல்லாண்டுகளுக்கு முன்பு முருகனின் தீவிர பக்தையான பெண் ஒருவர் நீண்ட வருடங்களாக குழந்தைபாக்கியம் இன்றி தவித்தார். தினசரி ரத்தினகிரியில் குடிகொண்டிருந்த முருகனை தரிசித்து தனக்கு குழந்தை வரம் தரும்படி மனமுருகி வேண்டி கடும் விரதம் மேற்கொண்டார். ஒரு நாள் அவர் தனிமையில் யாரும் இல்லாத வேளையில் ரத்தினகிரிக்கு வந்து முருகனை நீண்ட நேரம் வணங்கி, தனது குறையைக் கூறி கண்ணீர் விட்டு சுவாமியை வலம் வந்தார். அப்போது அங்கு வந்த ஆடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் அவரிடம், அழுவதற்கான காரணத்தைக் கேட்க அவர், தனக்கு புத்திர பாக்கியம் இல்லாததைக் கூறி வருந்தினார். அவர் கூறியதை பொறுமையுடன் கேட்ட அச்சிறுவன் கோயிலில் இருந்த விபூதியை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டு, பக்தியுடன் சுவாமியை வலம் வரும்படி கூறினான். அதன்படி அப்பெண் பக்தை, விபூதியை பெற்றுக்கொண்டு சுவாமியை வலம் வந்தார். சுவாமியை ஒரு முறை வலம் வந்த அவர் தன்னிடம் விபூதி கொடுத்த சிறுவனைக் காணாது அதிர்ந்தார். இச்சம்பவம் நிகழ்ந்த சில தினங்களிலேயே அப்பெண் கருவுற்றார். அதன் பின்னரே அவரிடம் ஆடு மேய்க்கும் சிறுவனாக வந்து பேசியது முருகப்பெருமான் என அறிந்து கொண்டார் அந்த பெண். முருகனே நேரில் வந்து பெண் பக்தைக்காக அருள்புரிந்து அற்புதம் நிகழ்த்திய சிறந்த தலம் இதுவாகும்.

> **பக்தர்களின் உள்ளங்களில் கோவில் கொண்டவன் முருகப்பெருமான் வானை உரசும் பொன்னாலான ராஜகோபுரங்களும், பொன் பதிக்கப்பட்ட மாடமாளிகைகளும், கூடை கோபுரங்களும் ஆயிரம் கால்களால் ஊனி நிற்கும் மண்டபங்களும் அவன் குடியிருக்கும் இடம் அல்ல. தூய அன்பு நிறைந்திருக்கும் பக்தர்களின் உள்ளங்கள்.** (விக்னேஸ்வரி **பக்.** 44)

இத்தலத்தில் உள்ள முருகன் நான்கு கைகளுடன் ஆயுதங்கள் ஏந்தியபடி இடதுபுறம் நோக்கிய மயிலுடன் காட்சி தருகிறார். இந்தக் கோயிலில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு பழக்கம் இருந்தது. முறைப்பெண்ணும், முறை மாப்பிள்ளையும் பொங்கலுக்கு மறுநாள் இங்கு வருவர். தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் வகையில், தாங்கள் கொண்டு வரும் பூக்களை மாப்பிள்ளைகள் தங்கள் வருங்கால மனைவியருக்கு சூட்டுவர். குழந்தை பாக்கியம் தரும் மிக புண்ணியமான தலமாக ரத்தினகிரி பாலமுருகன் கோவில் இன்று கருதப்படுகிறது.

**கோயிலின் சிறப்புகள்**

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாகும். ஆதலால், **'மலைமீது தோன்றி அவனே மழலையாயினான் காண்.'** என்று கந்த புராணம் கூறுகின்றது (கே.ஆர். கமலா முருகன், பக். 45) இத்தலத்து முருகனுக்கு பூஜையின் போது மலர்கள், நெய்வேத்தியம், தீபாராதனை, பூஜை செய்யும் அர்ச்சகர் இவை அனைத்தும் ஆறு என்ற எண்ணிக்கையில்

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

இருப்பது சிறப்பு. ஐப்பசி மாத பௌர்ணமியில் சிவனுக்கு அன்னாபிஷேகம் செய்வர் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அதே நாளில் முருகனுக்கும் அன்னாபிஷேகம் செய்வது இந்த ரத்தினகிரி பாலமுருகன் கோயிலில் மட்டுமே. சிவனிலிருந்து தோன்றிய சிவ அம்சமாதலால் முருகனுக்கும் அன்னாபிஷேகம் செய்கின்றனர். ஆடி கிருத்திகை அன்று முருகன் ஊர் பெயருக்கேற்ப ரத்தினங்களால் ஆன ஆடை அணிந்து காட்சி தருவது சிறப்பாகும். இத்தலத்தில் உள்ள வராஹி அம்மனை வளர்பிறை பஞ்சமியில், வாழை இலையில் அரிசி, தேங்காய், வெற்றிலை, பழம் வைத்து நெய் தீபமேற்றி வேண்டினால் திருமணத்தடை நீங்கும் என்பது ஐதீகம்.

**முடிவுரை**

முருகனை வேண்டி பிரார்த்தனை நிறைவேறியவர்கள் முருகனுக்கு பாலபிஷேகம் செய்தும், காவடி எடுத்தும் நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள். வழிபாடு என்பது ஏதோ பொழுது போக்கான ஒன்றோ, அல்லது மத சமய சடங்கு முறையினைச் செய்யும் செயலுள் ஒன்றாக மட்டுமின்றி , அது வாழ்வியலையும் மனதையும் செம்மைப்படுத்த உதவும் செய் முறையாகும். எனவே, பாலமுருகனின் சேவடி தொழுது அனைத்து வளமும் நலமும் பெறுவோம்.

**குறிப்புகள்**

[1] மா. ஜெயசெந்தில்நாதன். *தேவார வைப்புத் தலங்கள்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2009.

[2] புலவர் செந்துறை முத்து. *முருகன் தலங்கள்.* பாரி நிலையம், சென்னை, 2007.

[3] தணிகைமணி செங்கல்வராயன் பிள்ளை. *திருப்புகழ் உரை.* கழக வெளியீடு, சென்னை, 2000.

[4] சிவ. வ. கண்ணப்பன். *பன்னிரு திருமுறைத் திரட்டு.* கழக வெளியீடு, சென்னை, 1990.

[5] சா. குழந்தைவேல். *ஊரும் பேரும்.* சென்னை, 2008.

[6] ஹல்ட்ஸ்ச் (தொகு..), *எபிகிராபியா இண்டிகா*, தொகுதி-4, இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை, 1896-97.

[7] கனிமொழி செல்லத்துரை. "முருகன் வழிபாட்டு முறைகள்." *திணை காலாண்டிதழ்*, ISSN: 2347 - 3533, டிசம்பர் 2022.

[8] முனைவர் விக்னேஸ்வரி. "இந்துப் பண்பாட்டு மரபில் சிறு தெய்வங்களும் வழிபாட்டு நெறிகளும்." *அரண் பன்னாட்டு ஆய்விதழ்*, ISSN: 2582 - 399X, ஜூன் 2020.

[9] முனைவர் ப. ஜெயராஜ். "அருணகிரியாரின் அருள் அறம்." *சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்*, ISSN: 2454 - 3993, மார்ச் 2018.

[10] முனைவர் கே. ஆர். கமலா முருகன். "திருமுருகாற்றுப்படை கூறும் முருக வழிபாடு." *MJSSH Online Journal*, ISSN: 2590 - 3691, ஏப்ரல் 2022.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

# Architecture and Epigraphy of Cholapuram Vikrama Pandeeswarar Temple

**Dr. P. Thamilarasi,** Assistant Professor of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-9791-177X**
**DOI: 10.5281/zenodo.14498283**

## Abstract

*The Vikrama Pandiswarar Temple of Chozhapuram stands as a magnificent example of Tamil Nadu's temple architectural tradition. This temple is a proof to the rich cultural heritage and antiquity of Tamil Nadu. The name of the temple, "Vikrama Pandiswarar," highlights its traditional significance as a divine place constructed in a historically prominent era. The architecture of this temple displays the unique styles of the architecture of the Chola and Pandya periods. The sculptures, pillars and vimanas have been carefully designed with extraordinary precision and artistic excellence that mermer the hearts of the people. In particular, the temple's gopurams are adorned with intricate carvings and reflect the outstanding architectural skills of the Tamils. The inscriptions found in the temple is also significant detailing the origin of the temple and its patrons. These inscriptions offer invaluable insights of the social structure, religious practices, customs and regime of the time. The inscriptions of the Vikrama Pandiswarar Temple in Chozhapuram reveal thr details of divine worship and also the royal patronage, economic prosperity and cultural growth of the period. This temple stands the glory of ancient Tamil art and serves as an important resource for researchers and history enthusiasts alike. Hence, this article studies on the architectural patterns and epigraphy of the Vikrama Pandiswarar Temple.*

**Keywords:** Temple, architectural elements, endowments, Epigraphical records.

## References

[1] Ambai Manivannan. *Koyil Aaivum Nerimuraigalum*. A.R. Publications, Madurai, 2004.
[2] R. Narendra Kumar (ed.). *Rasaiya Aaivukkalangiyam*. Kavya Publications, Chennai, 2008.
[3] P. Rajendran, S. Shanthalingam (ed.). *Virudhunagar Mavatta Kalvetugal, Volume II*. Tamil Nadu Government Archaeological Department, Chennai, 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880



# சோழபுரம் விக்கிரம பாண்டீஸ்வரர் கோயில் கட்டடக்கலையும் கல்வெட்டுச் செய்தியும்

**முனைவர் பா. தமிழரசி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-9791-177X
DOI: 10.5281/zenodo.14498283

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழகத்தின் பிரமாண்டமான கட்டடக்கலையின் சிறந்த எடுத்துக்காட்டாக சோழபுரம் விக்கிரம பாண்டீஸ்வரர் கோயில் திகழ்கிறது. இக்கோயில், தமிழகத்தின் பண்பாட்டு வளமும் தொன்மையும் நிறைந்த ஒன்றாக இருக்கிறது. இக்கோயிலின் பெயரே அதன் சிறப்பை விளக்குகிறது; விக்கிரம பாண்டீஸ்வரர் கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தெய்வீகக் கோயிலாகும். இக்கோயில் கட்டடக்கலை, சோழர் மற்றும் பாண்டியர் கால கட்டடக் கலையின் தனித்துவத்தைக் காட்டுகிறது. இக்கோயிலின் சிற்பங்கள், தூண்கள் மற்றும் விமானங்கள் மிகுந்த கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. மிகக்குறிப்பாக, இக்கோயில் கோபுரங்கள் அழகிய சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டு, தமிழரின் கட்டடக்கலையின் சாட்சியமாக விளங்குகின்றன. இக்கோயிலின் கல்வெட்டுச் செய்திகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும். இக்கல்வெட்டுகள் வழியாக அக்காலத்தில் தமிழ் மக்களின் சமூக அமைப்பு, பிரதிகள், நெறிமுறைகள் மற்றும் அரசு நிலவரங்கள் குறித்து பல தகவல்களை அறிய முடிகிறது. சோழபுரம் விக்கிரம பாண்டீஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், தெய்வ வழிபாடு மட்டுமல்லாமல், அரச உரிமை, பொருளாதாரம் மற்றும் கலாச்சார வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன. இக்கோயில் தமிழகத்தின் பழங்காலக் கலையின் பெருமையை எடுத்துக்காட்டும் முக்கியமான தளமாகவும், ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்களுக்கு விலைமதிப்பற்ற கலைப்பொக்கிஷமாக திகழ்கிறது. எனவே, இக்கட்டுரை விக்ரம பாண்டீஸ்வரர் கோயிலின் கட்டிடக்கலை முறைகள் மற்றும் கல்வெட்டுகளைப் பற்றி ஆய்வு செய்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** கோயில், கட்டடக்கலை உறுப்புக்கள், நிவந்தங்கள், கல்வெட்டுப் பதிவுகள்.

**முன்னுரை**

தமிழகக் கோயில்கள் கட்டடக்கலைக்குத் தனிச்சிறப்புப் பெற்றவை. தமிழ் நாட்டில் காணப்பெறும் கோயில்களும் அரண்மனைகளும் இதர கட்டடங்களும் தமிழர்களின்

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

கட்டடக்கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. அப்பர் காலத்திற்கு முன் குடைவரைக் கோயில்கள் சில அமைந்திருப்பினும் பெரும்பாலானவை மண், சுடுமண் (செங்கல்), மரம் ஆகியவற்றாலேயே அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தின் தென் பகுதியில் பாண்டியர்களும் வடபகுதியில் பல்லவர்களும் பழங்காலத்திலேயே குடைவரைக் கோயில்கள், கற்றளி அம்பலம், ஒற்றைக் கற்றளி போன்றவற்றைக் கட்டினர். அவ்வகையில் இராஜபாளையம் பகுதியில் சோழபுரம் வட்டாரத்தில் அமைந்துள்ள விக்கிரமபாண்டீஸ்வரர் கோயிலின் கட்டடக்கலை அமைப்பையும் கல்வெட்டுச் செய்திகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. தமிழகத்தில் இடம்பெறும் கோயில்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. **குடைவரைக் கோயில்கள்**
2. **ஒற்றைக்கல் ரதங்கள்**
3. **கட்டுமானக் கோயில்கள்**

**கோயில் அமைவிடம்**

இராஜபாளையத்தில் இருந்து 10 கி.மீ.தூரத்தில் சங்கரன்கோயில் செல்லும் வழியில் சோழபுரம் கோயில் உள்ளது. சோழபுரம் முன்பு திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டத்தில் சேர்ந்து இருந்தது. 1910 - ஆம் ஆண்டுக்குப் பின்பு இவ்வூர் பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வந்தது. தற்போது விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டத்தில் உள்ளது.

**தேவநதி**

விக்கிரமபாண்டீஸ்வரர் கோயில் ‘தேவநதி’ என்னும் புண்ணிய நதியின் கரையில் அமைந்துள்ளது. கோயிலுக்கு முன்னால் தெப்பம் உள்ளது. இந்த தெப்பத்தில் இருந்து தான் விக்ரமபாண்டீசுவரருக்கும், குழல்வாய்மொழி அம்மைக்கும் அபிசேகம் செய்ய தண்ணீர் எடுக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இந்தத் தெப்பம் பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

**கோயில் எழுந்ததன் பின்னணி**

பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிக்காலத்தில் சோழபுரம் தலை நகரமாக விளங்கியது. கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் ஆதாரப்படியும், கோயிலில் மீன் சின்னம் இருப்பதாலும் இக்கோயில் பாண்டிய வேந்தன் சுந்தரபாண்டியன் என்பவனால் கட்டப்பட்டது என்று தெரிய வருகிறது. முதல் குலோத்துங்க சோழன் (கி.பி.1070 – கி.பி.1120) ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டை சீவல்லபாண்டியன் ஆண்டு வந்தான். மூன்று ஆண்டுகளே சிம்மாசனத்தில் வீற்றிருந்த இந்த வேந்தனுக்கு பிள்ளையார் சுந்தராபாண்டியத் தேவர், மனாபரணன் ஆகிய இரண்டு மகன்கள் இருந்தனர். சீவல்லபாண்டியன் அமரத்துவம் அடைந்த பிறகு வெண் கொற்றக் குடையின் கீழ் அமர்ந்த பிள்ளையார் சுந்தரபாண்டியத் தேவர், விக்ரமபாண்டீசுவரர்

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

கோயிலுக்கு ஏராளமான நிலங்களைத் தானம் செய்தான். பின்பு ஆட்சி நடத்திய வீரபாகு பாண்டியனுடன் விக்ரமசோழன் (கி.பி.1118 – கி.பி.1135) போர் புரிந்து வெற்றி பெற்றான். இவ்வாறு வீரபாகு பாண்டியனை விக்ரம சோழன் வென்று, சோழபுரத்தில் வீராபிசேகம் செய்து கொண்டதால் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் 'விக்ரம பாண்டீசுவரர்' என்று அழைக்கப்பட்டார்.

**கட்டடக்கலை**

விக்ரமபாண்டீசுவரர் கோயில் தமிழர்களின் கட்டடக்கலைக்கு கட்டியம் கூறுகின்றது. கோயிலின் சுற்றுச்சுவர் மூன்றரை அடி அகலத்தில் அமைந்துள்ளது. இரண்டு ஓரங்களிலும் பட்டிக் கற்காலும் நடுவில் மண்சாந்து கலந்தும் கட்டப்பட்டுள்ளன. ஆனால், சுற்றுச்சுவர்கள் கட்டுமானம் முற்றுப் பெறாமல் உள்ளது.

**கட்டடக்கலை உறுப்புக்கள்**

**அதிட்டானம்**

விமானத்தின் ஆறு அங்கங்களில் முதலாவதாக அமைவது அதிட்டானமே. அதிட்டானம் என்பது அடித்தளம் ஆகும். இவ்அடித்தளத்தின் மீதே ஏனைய ஐந்து அங்கங்களையும் ஒன்றன் மீது ஒன்றாக அமைப்பர்.




**படம். 1 - விமானத்தின் அதிட்டானம்**

இக்கோயில் கருவறையில் மேற்குப் பக்கம் இடம்பெற்றுள்ள அமைப்பு பத்மபந்த அதிட்டான வகையைச் சார்ந்துள்ளது. பத்மபந்த அதிட்டானம் என்பது உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை என்ற உறுப்புக்களைப் பெற்று விளங்கும். பத்மபந்த அதிட்டானத்திற்கு மேல் சிலம்பவரி இடம்பெற்றுள்ளது குறிக்கத்தக்கது.

**சிலம்புக் குமுதம்**

கடக விருத்த குமுதத்தில் அடுக்கி வைக்கப் பட்ட சிலம்புகளைப் போன்ற அலங்காரங்களோடு காணப்படுவது.

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**பிரநாளம் (ஆலய நீர்த்தூம்பு)**

அதிட்டானத்தில் இடம்பெறும் பயன்பாட்டுத்தேவையுடனான கட்டடக்கலைக் கூறாகும். இது ‘பிரநாளம்’ என்பர். கோயில்களில் கருவறைப் பகுதியிலிருந்து வெளியேறும் திருமஞ்சன நீர் வெளியேறுவதற்காக அமைக்கப்பட்ட பகுதி ‘**பிரநாளம்**’ எனப்படும். இந்த அமைப்பு கட்டுமானக் கோயில்கள் கட்டத் தொடங்கிய பின்னர்தான் அமைக்கப்பட்டது. இந்தப்பகுதி கருவறையின் தளத்திற்கு இணையான உயரத்தில் இருக்கும். இந்த பிரநாளங்களின் நடுப்பகுதியில் தண்ணீர் வெளியேறுவதற்கான பள்ளம் அமையும். இதனை அடுத்து சிம்மம், மகரம், யானை அல்லது வியாழனுடனான தண்டுப்பகுதியில் சிறிய அளவு அலங்காரங்களுடன் கூடுகளாக இருக்கும். சிறிய கோயில்களில் இது அதிக வேலைப்பாடுகளின்றி சாதாரணமாக அமைக்கப்படுவதும் உண்டு.

**படம். 2 - ஆலய நீர்த்தூம்பு வடிவம்**

கட்டுமானக் கோயில்களில் இடம்பெறத் தொடங்கிய இப்பிரநாளமானது மிக எளிமையாகத் தொடங்கப்பட்டது. இது விமானத்தின் வடக்குப்பக்கம் அதிட்டானத்தின் உறுப்புக்களில் எவ்உறுப்பானது கருவறையின் தளத்திற்கு இணையான உயரத்தில் உள்ளதோ அதில் அமைக்கப்படும். இக்கோயிலில் சிம்மமுகத்துடன் கூடிய தண்டுப்பகுதியில் சிறிய அளவிலான அலங்காரக் கூடுகள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய அமைப்பு பிற்காலப் பாண்டியர் காலத்தில் அதிக அளவில் காணலாம்.

**பித்தி (Bhitti)**

பித்தி என்பது கருவறையின் சுவர்ப்பகுதியாகும். இது அதிட்டானத்திற்கு மேல் உள்ள பகுதியாகும். இது கால் எனவும் அழைக்கப்படும். இச்சுவர்ப்பகுதியில் கட்டடக்கலைக் கூறுகளாக அரைத்தூண், தேவகோட்டம், கோட்ட பஞ்சரம், கும்பபஞ்சரம், கம்ப பஞ்சரம் முதலான உறுப்புகள் இடம்பெறுகினறன.

**தோரணம்**

**படம். 3.a - தோரணம்**

**தோரணம்**

**படம். 3.b - தோரணம்**

### கோட்ட பஞ்சரம் (Kostha Panjaram)

கோயிலின் விமானம், மண்டபங்கள், கோபுரங்கள் ஆகியவற்றின் சுவர்கள் வெறுமையாக இல்லாமல் இருக்க அமைக்கப்படும் அழகுறுப்புகள் 'பஞ்சரங்கள்' எனப்படும். '**கோட்ட பஞ்சரம்**' (கோஷ்ட பஞ்சரம்) இரண்டு தூண்களும், அவற்றின் மேல் அமையும் அழகணிகளும், இரண்டு தூண்களுக்கு இடையில் உள்ள உள்ளொடுங்கிய, மாடம் போன்ற '**கோட்டம்**' என்ற பகுதியும் கொண்ட அமைப்பு. கோட்டங்களின் இருபுறத் தூண்கள் ஒரு தூணை இரண்டாகப் பிளந்தது போன்றவை. அவ்வாறு வெட்டி அவற்றின் இடையே அமைத்தது போன்ற அமைப்புடையது கோட்டம். இந்த கோட்டத் தூண்கள் '**நகுல பாதம்**' எனப்படும். தமிழில் '**அணைவுத் தூண்கள்**'. நகுல பாதம் தமிழகத்தில் மட்டும்

காணப்படும் கலைக்கூறு ஆகும். கோட்ட பஞ்சரங்கள் விமானத்தின் தரைத் தளம், மேல் தளங்கள், கிரீவம், அர்த்த மண்டபம், மற்ற மண்டபங்களின் பித்தி, கோபுரம் ஆகியவற்றில் அமையும். தெய்வங்களுக்கான் கோட்டங்கள் '**தேவ கோட்டம்**' என்றும் அழைக்கப்படும். தேவகோட்டங்கள் மேற்பகுதியின் அமைப்பைப் பொருத்து இருவகைப்படும்.

- **தோரண அமைப்புடைய தேவகோட்டம்**
- **சாலை அமைப்புடைய தேவ கோட்டம்**

தோரண அமைப்புடைய தேவகோட்டங்கள் மேற்பகுதியில் பத்ர, சித்திர, மகர ஆகிய மூவகைக தோரண அமைப்புகளில் ஒன்றை உடையன.

**தேவகோட்டம்**

விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் கருவறை சுவர்பகுதியில் தேவகோட்டங்கள் இடம்பெற்றுள்ளன. தேவகோட்டங்களில் மகாவிஷ்ணு, பிரம்மன், தட்சிணாமூர்த்தி ஆகிய இறையுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**கபோதம் (Cornice or Kodungai)**

கபோதம் என்னும் உறுப்பானது பயன்பாட்டுத் தேவை கருதி எழுதகத்தின் மேல் அமைகிறது. கவிழ்ந்திருப்பதால் இது கபோதம் எனப்பெயர் பெற்றதாகக் கூறுவர். இது மழைநீரானது கருவறைச் சுவரின் வெளிப்பகுதியில் படாமலிருப்பதற்காக அமைக்கப்படுவதாகும். கட்டுமானக்கோயில்களில் இடம்பெற்று வந்த கபோதம் விசயநகர நாயக்கர் காலத்தில் தாழ்வார (கொடுங்கை) அமைப்பைப் பெறுகின்றது.

**படம். 4 - கொடுங்கை**

கொடுங்கை அமைப்பு இடம்பெறும் போது அதன்கீழ் தாழ்வாரக்கட்டை அமைப்பு காணப்படும்.

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**கூடுகள்**

கபோதங்களின் மேல் இடம்பெறும் கூடுகள் அலங்கார வேலைப்பாடு கருதி அமைக்கப்படுவதாகும். பொதுவாகக் கோயில்களின் அமைப்பு அக்கால மனிதன் வாழ்ந்த வீட்டின் அமைப்பைப் பெற்றுப்பின், அதில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வளர்ச்சியடைந்தது எனலாம். இதில் அக்காலத்தில் கூரை வேயும் போது வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்திற்காக அக்கூரையில் ஆங்காங்கே வளைத்து மேய்ந்திருப்பர். அத்தகைய பயன்பாட்டுத் தேவைகருதி இடம்பெற்ற அப்பகுதியே பிற்காலத்தில் கூடாக அமைகிறது.

**படம். 5 - கூடு**

கூடுகள் சுமார் ஓர் அடி முதல் நான்கு அடி வரையிலான அளவினதாய் அமைக்கப்படும். கூடுகளின் ஓரங்களில் உள்ள முகப்பட்டி அலங்காரத்துடனோ, அலங்காரம் இன்றியோ அமையும். கூடுகளின் உட்பகுதி பள்ளமாக வெட்டப்பட்டு அதில் இறையுருவங்கள், மனிதத்தலைகள், நடனச்சிற்பங்கள் முதலிய பல உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். இக்கோயிலில் கூடுகள் சிம்ம வடிவிலான அலங்காரத்துடன் காணப்படுகிறது. கூடுகளின் உட்பகுதியிலும் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**யாளிவரி (Yali Frieze)**

கபோதத்திற்கு மேல் இடம்பெறும் கட்டடக்கலை உறுப்பு யாளிவரி ஆகும். இது அலங்கார வேலைப்பாடாக அமைகின்றது.

**படம். 6 - யாளிவரி**

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

இந்த யாளி வரிசையின் இறுதி முனைகளில் மகரங்கள் இடம்பெறும். யாளிவரியுடன் பிரஸ்தரப்பகுதி முடிவடைகிறது.

**திருக்களிற்றுப்படி**

கோயில் மண்டபங்களின் தூண்கள் அணிஓட்டுத் தூண்களாகவும் அவை அலங்கரிக்கப்பட்டும் சிற்ப வேலைப்பாடுகளுடனும் திகழ்கின்றன. தூண்களுடன் ஆளுயரச் சிற்பங்களும் அழகுற இடம்பெற்றுள்ளன. இம்மண்டபங்களுக்கு ஏறிச் செல்லும் படிகள் அமைத்ததோடு அதன் இருபுறமும் யாளி அல்லது கஜயாளிகளைக் கொண்ட அலங்கரிக்கப்பட்ட கைப்பிடிகள் (Balustrades) அமைக்கப்பட்டன. இவை 'திருக்களிற்றுப்படி' என அழைக்கப்படும். இத்தகைய மண்டபங்கள் நான்கு புறமும் திறந்த நிலையிலும், மூடிய நிலையிலும் அமைக்கப்பட்டன. மண்டபங்கள் இன்றளவும் விழாக் காலங்களில் பெரிதும் பயன்பாடுடையதாக அமைந்து வருகின்றன. விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் திறந்த நிலையில் அமைந்துள்ள மண்டபங்களில் திருக்களிற்றுப்படி அமைக்கப்பட்டுள்ளன. பாண்டியர்கள் தங்களுக்கு உரித்தான முறையில் யாளி வடிவிலும் யானை துதிக்கையை நீட்டிய நிலையிலும் அலங்கார வேலைபாடுகளுடனும் திருக்களிற்றுப்படியை அமைத்துள்ளனர்.

**படம். 7.a & 7.b. - கோயிலின் திருக்களிற்றுப்படி**

ஆயிரம் ஆண்டுகள் பழமை காரணமாக கோயிலின் சில பகுதிகள் ஆங்காங்கே சிதைந்த நிலையில் உள்ளன. மண்டபங்களின் வாயிலில் புதிதாக சுதை வடிவிலான திருக்களிற்றுப்படியை உருவாக்கி உள்ளனர். எனினும் பழமையின் அழகை இதனால் மீட்டெடுக்க முடியவில்லை என்றே தோன்றுகிறது.

**கோபுரங்கள்**

பௌத்தர்களின் ஸ்தூபிகளுக்கு வெளியே தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியே பிற்காலத்தில் கோபுரங்களாக மாறின. சோழர் காலத்தில்

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

கோபுரங்கள் மிகவும் சிறியனவாக இருந்தன. பிற்காலப் பாண்டியரது காலத்தில் உயர்ந்த கோபுரங்களை அமைக்கும் மரபு தொடங்கியது.

**படம். 8 - விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் நுழைவாயில்**

விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் நுழைவாயில் கோபுரம் இன்றி காணப்படுகிறது. மேலே உள்ள நிழற்படமே கோயிலின் நுழைவாயில் ஆகும். கோயில்கட்டுமானம் ஆங்காங்கே முழுமை பெறாமலே காணப்படுகிறது. அதுபோல ராஜகோபுரமும் முழுமை பெறாமல் இருக்கிறது. இதற்கு சோழ, பாண்டியர்களின் போர்களே காரணமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. (இராசையா ஆய்வுக் களஞ்சியம், ப. 88) பாண்டியர் காலத்தில் கோபுரங்களை எழுப்பும் மரபு இருந்தாலும், பாண்டியர்களால் கட்டப்பட்ட இக்கோயிலில் கோபுரங்கள் இல்லாமல் இருப்பது ஆய்விற்குரியதாக அமைகின்றது.

திருக்கோயில் கோபுரம் (முதல்) தென்புறத் தூணில் கோபுரத்திற்கு “ஸ்ரீசுந்தர பாண்டியன் திருக்கோபுரம்” என்று பெயரிடப்பட்டுள்ளமையைக் கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகின்றது.

**ஸ்வ ஸ்தி ஸ்ரீ சுந்தர பா**

**ண்டியன் திருக் கே**

**புரம் (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்., தொகுதி – II, ப. 141)**

திருக்கோயில் இரண்டாம் கோபுரத்திற்குத் தம்பிக்கு நல்லான் திருக்கோபுரம் என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதைக் கல்வெட்டுச் செய்தி புலப்படுத்துகிறது.

**தம்**

**பிக்கு நல்லான்**

**திருக்கோபுரம் (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி – II, ப. 142)**

திருக்கோயில் இரண்டாம் கோபுரம் வடக்குத் தூணில் உள்ள கல்வெட்டு இரண்டாம் கோபுரத்தின் நிலைக்காலைச் செய்தளித்தவன் அகப்பரிவாரத்தைச் சேர்ந்த சுந்தர பாண்டிய பல்லவரையன் என்ற செய்தியைப் புலப்படுத்துகிறது.

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**பரிவாரக்கோயில்கள்**

கோயில் சுற்றுச்சுவர் வழியாகச் சென்றால் முதலில் பலிபீடம் உள்ளது. அடுத்து விக்கிரபாண்டீசுவரர் லிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். கருவறைக்கு முன்னால் நந்திதேவரும், வடக்குப்பக்கம் சண்டிகேசுவரும், தென்பக்கம் தட்சிணாமூர்த்தியும் வீற்றிருக்கிறார்கள். வாயிலின் ஒரு பக்கத்தில் காசிலிங்கம் காணப்படுகிறது. கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் கன்னி விநாயகர் கோயிலும், வடமேற்கு மூலையில் ஆறுமுக நாயனார் கோயிலும் மையப்பகுதியில் தல விருட்சமான வில்வ மரமும், தீர்த்தக் கிணறும், சனீசுவரர் கோயிலும், கிழக்குப் பக்கம் நடராஜருக்கும் பைரவருக்கும் சிறிய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**குழல்வாய் மொழி அம்மை சன்னதி**

கோயிலின் வெளிச்சுற்றுப் பிரகாரத்தில் இறைவனுக்குத் தென் புறத்தில் குழல்வாய் மொழி அம்மையின் திருக்கோயில் அமைந்துள்ளது. ஈசான மூலையில் விஷ்ணுவுக்கும் ஆஞ்சநேயருக்கும் கோயில்கள் உள்ளன. சிவன் கோயிலில் ஆஞ்சநேயருக்கு சிலை இருப்பது சமயப்பொதுமையை வெளிக்காட்டுகிறது எனலாம்.

**நிவந்தங்கள் குறித்த கல்வெட்டுப் பதிவுகள்**

கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு திருஆடல் திருப்பவனிக்கு வேண்டிய நித்தநிவந்தங்களாகக் கொடுக்கப்பட்ட தானம் பற்றி திருக்கோயில் இரண்டாம் திருக்கோபுரம் தென்புறப் பட்டியில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இடையிடையே சிதைந்துள்ள இக்கல்வெட்டு இக்கோயில் இறைவர்க்கு மன்னனால் கொடுக்கப்பட்ட நிலத்தானத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மன்னனின் பெயரால் அவனி வேந்தராமன் சந்தி ஏற்படுத்தப்பட்டிருந்ததை இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகின்றது.

> **கோனேரின்மை கொண்டான் ஆன்மர் நாட்டு சோழபுரத்து உடையார் விக்ரம பாண்டிசுரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு னாயனாற்கு நம்பேரால் கட்டின அவனிவேந்தராமன் சந்திக்கு… அமுதுபடி சாத்துப்படி செஞ்சன முள்ளிட்ட… (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி II, ப. 153)**

திருக்கோயில் வடக்குச் சுவர்ப் பகுதியில் விக்கிரம பாண்டீசுவரமுடையார் திருக்கோயிலில் மாடாபத்தியமாக ஆரிய நாட்டிலிருந்த வாசுதேவநல்லூர் சிந்தாமணி நாதர் கோயில் கைக்கோளரில் பட்டர் அழகர் என்பவர் நியமிக்கப்பட்டு அவருக்கு மாடாபத்தியக் கணக்கு காணியாட்சியாக 2 மா நிலம் வழங்கப்பட்டிருந்தமையைத் தெரிவிக்கிறது. (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி.II, ப.145) வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் உள்ளது. இதில் இறைவனுக்குரிய திருவிடையாட்ட பிரம்மதேயமாக விளங்கிய உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த திருநல்லூருக்குரியவரான நாராயணன்

நாராயண பட்டர் என்பவர் கோயிலில் திருநந்தா விளக்கு மற்றும் சந்தியா தீபம் எரிப்பதற்காக வேண்டி 8 ½ அச்சு (பணம்) வழங்கியுள்ளமையைத் தெரிவிக்கிறது.

**தொகுப்புரை**

சோழபுரம் விக்கிரமபாண்டீஸ்வரர் கோயில் கட்டடக்கலை நுட்பம் தமிழகக் கோயிற்கலைக்கு மற்றுமொரு சான்றாக அமைந்திருப்பதை இக்கட்டுரை வாயிலாக உணரகின்றது. மன்னர்கள் தங்கள் ஆட்சிச்சிறப்பை எடுத்துரைக்க கோயில்களைக் கட்டினாலும் அதில் நூலறி புலவர்களால் நுண்ணிதின் ஆய்ந்து கட்டிய விதம் அவர்களின் ஆட்சியைக் காலம் கடந்தும் பறை சாற்றி நிற்கிறது என்பதில் வியப்பில்லை. விக்கிரமபாண்டீஸ்வரர் கோயில் 1000 ஆண்டுகள் தாங்கிய கட்டடக்கலை உறுப்புகளையும் அதன் அழகுணர்ச்சியையும் கட்டியம் கூறி நிற்கின்றது. கோயில்களுக்கும் அதனை நாடி வரும் மக்களுக்கும் நிவந்தங்கள் அளித்த சிறப்பையும் கல்வெட்டுச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. சிவன் கோயிலாக இருந்தாலும் விஷ்ணு சந்நிதி, ஆஞ்சநேயர் சந்நிதி இருப்பது மன்னர்களிடம் உள்ள சமயப் பொதுமையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

**துணைநூல்கள்**

[1] அம்பை மணிவண்ணன். *கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்.* ஏ.ஆர்.பப்ளிகேஷன்ஸ், மதுரை, 2004.

[2] இரா.நரேந்திரகுமார் (தொ.ஆ.). *இராசையா ஆய்வுக்களஞ்சியம்.* காவ்யா வெளியீடு, சென்னை, 2008.

[3] ப.இராஜேந்திரன், சொ.சாந்தலிங்கம் (ப.ஆ.). *விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி II.* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
*A Peer-Reviewed Journal*

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

# Thirupparankundram in Tamil Literature

**Dr. B. Periyaswamy**, Assistant Professor of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Thiruvannmalai, Tamil Nadu, India,
ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699
**DOI: 10.5281/zenodo.14498289**

## Abstract

*Thirupparankundram is the one of the six holy abodes of Lord Muruga. The temple holds a significant place in Tamil literature and has ben celebrated for its religious, cultural, and historical importance. The temple is revered in ancient Tamil bakthi and Sangam literatures for its divine and spiritual philosophy. Especially, "Thirumurugatrupadai" by Nakkeerar is the first part of the "Pattuppattu" anthology that describes the sanctity and beauty of Thirupparankundram. It highlight its spiritual prominence and the legend behind it. Moreover, many references to this holy place are found in "*Paripadal*" and other Sangam works portraying its deep connection to Tamil culture. Thirupparankundram remains a symbol of Tamil spirituality and continues to inspire many Tamil poets, devotees and historians. This article is written with the aim of highlight the significance of tamil literary works often particularized as bhakthi literature about Thirupparankundram.*

**Keywords:** Murugan, Thirupparankundram, Tamil Literature, Bhakthi Literature.

## References

[1] Arunagirinathar. *Tirupukazh* (Moolamum Uraiyum). Sarada Publishing House, Chennai, 2009.
[2] *Akananooru*. New Century Book House, Chennai, 2007.
[3] *Kalithogai*. New Century Book House, Chennai, 2007.
[4] *Kurinchipattu*. New Century Book House, Chennai, 2007.
[5] *Tirumurugatrupadai*. New Century Book House, Chennai, 2007.
[6] *Paripadal*. New Century Book House, Chennai, 2007.
[7] *Purananuru*. New Century Book House, Chennai, 2007.
[8] Niramba Ashaya Desikar, *Tiruparangiri Puranam*, Meenalosani Achiyantrasalai, Madurai, 1928.
[9] Puliyurkesigan. *Paripadal* (Moolamum Uraiyum). Sarada Publishing House, Chennai, 2009.
[10] Dr. Siva. Tiruchirambalam, Thirumurugan Kalaikalanjiyam. Thiruvarasu Bookstore, Chennai, 2004.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 5, Issue 1, November 2024** **E-ISSN: 2583-0880**

# தமிழ் இலக்கியங்களில் திருப்பரங்குன்றம்

**முனைவர் பீ. பெரியசாமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699**
**DOI: 10.5281/zenodo.14498289**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் மக்களின் முழுமுதற் கடவுளான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்தின் வரலாற்றுச் சிறப்பினையும், இத்தலத்தின் பெருமையினையும் திணை இலக்கியங்களின் வாயிலான எடுத்துரைப்பதையே நோக்காகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அசுரரை வெற்றிக் கொண்டதற்காக இந்திரன் தன் மகளாகிய தேவயானையைத் தர தேவர்கள் மூவர்கள் புடைசூழ நடைபெற்றது. இதற்காக ஏற்படுத்தப்பட்டதே இத்தலம் எனும் வரலாற்றையும் இக்கட்டுரை வாயிலாக அறிய இயலும்.*

**குறிப்புச்சொற்கள்:** முருகன், திருப்பரங்குன்றம், தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம்.

## முன்னுரை

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் குடி இருக்கும் இடம். ஆதிகால மனிதர் குன்று சார்ந்த குறிஞ்சி நிலப்பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் முருகன் கடவுளாகப் படைக்கப்பட்டிருக்கின்றார். *தொல்காப்பியம்* தொட்டு இன்றைய இலக்கியங்கள் வரை முருகன் அருள்தரும் அன்புக் கடவுளாகவும் முத்தமிழ் வேந்தனாகவும் தமிழ்க் கடவுளாகவும் அழகனாகவும் ஆறுமுகனாகவும் அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறார். இருப்பினும் சங்கத் தமிழ் நூல்கள் முருகனை வெறியாட்டுக்குரிய கடவுளாகவும் பலி பெறக்கூடியவனாகவும் அடையாளப் படுத்துகின்றன. இக்காலத்தில் அது மருவி முருகனை ஒரு சைவ உணவு கொள்பவனாகவும் காவடிக்கு உரியவனாகவும் அடையாளப் படுத்தியதன் விளைவால் முருகன் வழிபாடு முற்றிலும் தடம் மாறிப்போனது என்றே கொள்ளலாம். இருப்பினும் எத்தனை மாற்றங்கள் வழிபாட்டில் மாறியபோதும் முருகன் மீதான தமிழ் மக்களின் அன்பு மட்டும் மாறாது தொடர்ந்து முருகனை வழிபட்டு வருகின்றனர். இவ்வாறாக இருக்கும்போது திருப்பரங்குன்றத்து முருகனின் சிறப்புகளை இக்கட்டுரை ஆய்கிறது.

## பெயர்க்காரணம்

முருகனே தலைசிறந்த கடவுள் என்பதை திருமுருகன் களஞ்சியம், **“முருகனுக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை / மிளகுக்கு மிஞ்சிய மருத்துவமும் இல்லை” (திருமுருகன் கலைக்களஞ்சியம்,**

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**ப.223)** என்று கூறுவதிலிருந்து அறிந்துக் கொள்ளலாம். அவனின் அறுபடைவீடுகளில் முதல் படைவீடானது திருப்பரங்குன்றம். *திருமுருகாற்றுப்படை* ஆசிரியர் நக்கீரர், இத்தலத்து மூலவரை வழிபட்டு தனது குறையை நீக்கிக் கொண்டார் என்றும், இத்தலத்திற்குதளர்பரங்குன்று, தென்பரங்குன்று, பரங்குன்று, பரங்கிரி, திருப்பரங்கிரி பரமசினம், சத்தியகிரி, கந்தமாதனம், கந்த மலைஎன்கிற பல பெயர்கள் உண்டு. திரு+பரம்+குன்றம். பரம் என்னும் சொல். சிவபெருமானைக் குறிக்கும். குன்றம் என்பதற்கு குன்று என்று பொருள். ‘திரு’ அதன் சிறப்பைக் குறிக்கின்றது. ஆரம்ப காலத்தில், திருப்பரங்குன்றம் கோயிலின் பின்புறத்தில் தென்பரங்குன்றம் குடவரைக் கோவில் இருந்திருக்கின்றது. இக்கோவில் சேதமடைந்தபோது கோவிலை மறுபக்கத்திற்கு மாற்றி முருகப்பெருமானை வடக்கு நோக்கி அமைத்திருக்கின்றனர். எனவே ‘திருப்பிய குன்றம்’ என்றழைக்கப்பட்ட இவ்வூர் “திருப்பரங்குன்றம்” என்று மருவியது என்று மற்றொரு காரணப் பெயர் கூறுகின்றனர்.

**வரலாறு**

கயிலை மலையில் பார்வதி தாயாருக்கு, சிவபெருமான் பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசிக்கும் போது, பார்வதிதாயாரின் மடியில் அமர்ந்து அதனை முருகன் கேட்டுள்ளார். முருகன் குரு இன்றி பிரணவ மந்திரப் பொருளைக் கேட்டதனால் அக்குற்றத்திற்கு பரிகாரம் தேடி பரங்குன்றம் வந்து தவம் செய்தார். அதனை ஏற்கும் பொருட்டு சிவபெருமானும், பார்வதி தேவியாரும் முருகன் முன் எழுந்தருளினர். அவ்வாறு எழுந்தருளிய சிவன் - பரங்கிநாதர்; தாயார் - ஆவுடை நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு காட்சியளித்த நாள் தை மாதம் பூச நட்சத்திரத்திரம் ஆகும். எனவே, அங்கு தைப்பூச விழா பத்து நாட்கள் நடைபெறுகின்றது. முருகன் சூரபத்மனையும் அவனது படைகளையும் அழித்துதேவர்களைக் காத்தார் என்றும், அதன் பொருட்டு இத்தலத்தில் முருகனுக்கு இந்திரன் தனது மகளாகிய தெய்வானையைக் திருமணம் செய்து கொடுத்தார் எனவும் கூறப்படுகின்றது.

**தலசிறப்பு**

மதுரையில் மேற்கே சுனையுடன்கூடிய திருத்தலத்தில் முருகன் எழுந்தருளியுள்ளான் என்பதை,“கூடல்பதியின் மேற்கே ஒருபால் சுனையுடன் கூடிய குன்றில் முருகன் எழுந்தருளி உள்ளான் என்கிறார்.” (திருமுருகு. 71-77) நக்கீரர்.திருமாலும், சிவபெருமானும், பிரமனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவனி மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், உருத்திரர் பதினொருவரும், திக்குப் பாலகர்எண்மரும், ஏனைத் தேவர்களும், அசுரரும், முனிவர்களும் நின்னைக் காணும் பொருட்டுமண்ணுலகின்கண் வந்து உறையும் இடமாக திருப்பரங்குன்றம் உள்ளதென்றும் அது “இமயக் குன்றத்தை ஒக்கும்” (பரி. 8: 11) எனவும் நல்லந்துவனார் திருப்பரங்குன்றின் சிறப்பினைக் குறிப்பிடுகின்றார்.

**முருகனின் காட்சி**

முருகப் பெருமான் திருப்பரங்குன்றில்தன் மனைவியான தேவயானையின் காதலனாகவும், கடப்பமாலை புரளும் அழகிய மார்பினனாகவும் காட்சியளிக்கின்றான் என்பதை,

**மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்**
**கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்**
**கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்**
**கோபத்தன்ன தோயாப் பூந்துகில்**
**பல்காசு நிரைத்த சில்கா ழல்குல்**
**கைபுனைம் தியற்றாக் கவின்பெறு வனப்பின்**
**நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்**
**சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனி (திருமுருகு. 12- 19)**

என்று சூரரமகளிர் முருகனைப் புகழ்ந்து பாடி ஆடுகின்றனர்.

**முருகன் தெய்வயானை திருமணம்**

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் முருகன் "சுப்ரமணியர்” என்று அழைக்கப்படுகிறார். சூரபத்மனிடம் போரிட்டு வெற்றி பெற்ற சுப்ரமணியருக்கு இந்திரனின் மகளான தெய்வயானையை திருமணம் செய்து கொடுக்க பிரம்மா, விஷ்ணுவிடம் சொல்ல, அவர் சுப்ரமணியரிடம் சொல்ல, அவர் தன் தாய் தந்தையிடம் சொல்ல, இந்திராணி தெய்வயானையிடம் தூது அனுப்ப, அவரும் சம்மதிக்கின்றார். சிவன், சக்தி இருவரும் முன்னிலையில் திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடைபெற்றிருக்கின்றது. “தேவர்கள் துயரைப் போக்கிய முருகனுக்கு இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையைத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். பிரம்மா விவாக காரியங்கள் நிகழ்த்த, சூரிய, சந்திரர்கள் ரத்ன தீபங்கள் தாங்க, பார்வதி - பரமேஸ்வர் பரமானந்தம் எய்த, முருகப்பெருமான் தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்டதாகத் *திருப்பரங்குன்றம் புராணம்* கூறுகிறது.

திருப்பரங்குன்றம் சிவாலயத்தை ஒக்கும் (பரிபாடல்). திருப்பரங்குன்றம் என்னும் ஆலயம் சிவபெருமான் குடி கொண்டிருக்கும் இடத்தை ஒக்கும் என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது.

**ஆதிரை முதல்வனிற் கிளந்த**
**நாதர்பன் னொருவரும் நன்திசை காப்போரும்**
**யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்**
**மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்**
**பற்றாகின்று நின் காரணமாகப்**

Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

**பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும் (பரி. பா. எ. 8, பா. வரி. 6-11)**

**மேலும் அதனை,**

> **ஆதிரை முதல்வனாகிய சிவபிரானது பெயராலேயே சொல்லப்படுகின்றவரான பதினொரு உருத்திரரும், நல்ல திசைகளை காப்போராகிய இந்திரன், நியதி, இயமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன், ஈசனாகிய எணர்மரும் மற்றுமுள்ள தேவர்களாகிய யாவரும் இவரொழிந்த அமரரும் அவுணரும் ஆகிய பிறருமாகிய எல்லாரும் விரும்பத்தக்க வேதங்களைக் கற்ற சிறந்த தவமுதல்வர்களாகிய எழுவரும், நின்னைக் கண்டுபோற்றும் பொருட்டாக இத்திருப்பரங்குன்றத்திற்கு வருபவராகின்றனர். ஆதலினாலே, இப்பரங்குன்றமானது எம்பெருமானாகிய சிவபிரான் குடிகொண்டிருக்கும் இமயக்குன்றமாகிய திருக்கயிலாயத்தையே ஒப்புடையதாக விளங்குவதாகும் (புலியூர்கேசிகன், பரிபாடல் தெளிவுரை, ப.77)**

இங்கு விளங்கும் திருப்பரங்குன்றத்தின் சிறப்பு சிவபெருமான் குடிகொண்டிருக்கும் கைலாய மலையின் இடத்தைப் போன்று சிறப்புற்று விளங்குகின்றது என்று குறிப்பிடப்படுகின்றது.

**சூளுரைத்தல் மரபு**

பண்டைத் தமிழரிடையே 'சூளுரைத்தல்' என்ற பழக்கம் மரபாக இருந்துவந்துள்ளது. இவ்வாறு சூளுரைக்கும் போது இறைவன் திருமுன்பு நின்று நீர் குடித்து அதனை உறுதிப்படுத்துவது தமிழர் மரபு . இதனை,

**விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்**
**கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை**
**மீமிசைக் கடவுள் வாழ்த்திச் கைதொழு**
**தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி**
**யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்து (குறிஞ். 206-211)**

எனக் *குறிஞ்சிப்பாட்டு* வாயிலாக அறிய முடிகின்றது. அவ்வாறு சூளுரைக்கும்தலைவன் திருப்பரங்குன்று மேல் ஆணையிட்டு சூளுரைக்கும் காட்சி பரிபாடலில் இடம்பெற்று உள்ளது. தலைவன்தாள் ஆற்றுக்கே செல்லவில்லை என்கிறான். செல்லாதபோது, அவள் குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய்யேயாகும் என்று கூறிவாதிடுகின்றான். இதனையடுத்து காதற்பரத்தையின் வீட்டிலிருந்த முதுபெண்டிர், அவள் ஊடலைத் தணியச் செய்தனர். தலைவனும் அவளோடு இன்புற்றுக் களித்தான்.

**இவ்வையை யாறென்ற மாறெண்ணா? கையால்**
**தலைதொட்டேன் தண்யாங்குன்று (பரி.6, பா. வரி. 94-95)**

மேலும் அதனை,

மேலும் அதனை, **“யானாடியது என்று நீ கூறிய மாற்றந்தான் எதனாலோ? அஃதன்று: யான் ஆடியது பசிய தடாகமே தண்ணியபரங்குன்றின் மேல் ஆணை: நின் தலையைத் தொட்டேன்” (புலியூர்த் கேசிகன், பரிபாடல் தெளிவுரை, ப. 55)** என்கிறான். பண்டைக்கால மக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றிக் கூறுமிடத்து திருப்பரங்குன்று குறித்த நம்பிக்கை இடம்பெறுவதை அறியமுடிகின்றது. மேலும், பரிபாடலில் நல்லந்துவனார் 6, 8, 11, 20 ஆகிய பகுதிகளிலும் திருப்பரங்குன்று ஆலயக் கருத்துக்களைப் பற்றி எழுதியுள்ளார்.

**சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்**
**சினம்மிகு முருகன் தள்பரங்குன்றத்து (அகம். 59, 10-11)**
**திரு மணி விளக்கின் அலைவாய்ச்**
**செருமிகு சேஎயொடு உற்ற சூளே! (அகம். 266, 21-22)**

இப்பாடல்களின் முறையே ‘தளர்பரங்குன்றம்’ என்பது திருப்பரங்குன்றத்தையும், அடுத்த பாடலில் வரும் ‘அலைவாய்’ என்னும் சொல் ‘திருச்சீரலைவாய்’ என்ற ‘திருச்செந்தூரை’(க்) குறிக்கின்றது.

**ஒன்னாதார்க் கடந்து அடூஉம், உரவ நீர் மா கொன்ற**
**வெள் வேலான் ஒன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்? (கலி. 27, 15-16)**

இப்பாடலில் இடம்பெறும் ‘வேலான்குன்று’ திருப்பரங்குன்றத்தைக் குறிக்கின்றது. இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கும் முருகன் பகைவர்களைமாயம் செய்து கொல்லாது வென்றுகொல்லும் வெற்றிவேலினை உடையவன் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

**வெள் தலைப்புணரி அலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை**
**கடுவளி தொகுப்ப ஈண்டிய**
**வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே (புறம். 55, 18-21)**

புணரி அலைக்கும் செந்தில் என்னும் புறநானூற்று வரி கடற்கரையில்எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றத்தைக் குறிக்கின்றது.

**விழாக்கள்**

இக்குன்றத்து கோயில் திருவிழாக் காலத்தில் பாண்டிய மன்னன் தனது நான்கு வகைச் சேனைகளுடன் சென்று வழிபடுவது ஒரு மரபாக இருந்திருக்கின்றது.

**மாடமலி மறுகிற் கூட குடவயின்**
**இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த**
**முள்தாள் தாமரை துஞ்சி வைகறைக்**
**கள்கமழ் நெய்தல் ஊதி ஏற்படக்**
**கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்**

**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**
**குன்றமர்ந்து உறைதலும் உரியன் (திருமுருகு. 71-77)**

என திருப்பரங்குன்றத்து இயற்கையை நக்கீரர் பாடுகின்றார். முருகனுக்கும் தேவசேனைக்கும் திருமணம் முடிந்த தலம். நக்கீரர் பூதத்திடம் சிக்கிக்கொண்டு முருகன் அருளால் விடுதலை பெற்ற நிகழ்வை கொண்டு முருகன்அருளால் விடுதலை பெற்ற நிகழ்வை,

**பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்கு மொரு**
**கவிப்புலன் இசைக்குருகி**
**வரைக்குகையையிடித்து வழி காணும்**
**மயில் நடத்து குகன் வேலே (திருப்புகழ். 306)**

அருணகிரியார் எடுத்துரைக்கின்றார்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற திருமணத்தில் பிரம்மன் திருமணத்தை முன்னின்று நடத்த, சூரியனும் சந்திரனும் இரத்தின தீபங்கள்தாங்கி நிற்கவும், உமையம்மையும் தென்னவர் கோள் பரமேஸ்வரனும் இணையாக நின்று வாழ்த்தவும், இந்திரன் தகப்பனார் கடமையாக தாரைநீர்வார்த்துக் கொடுக்கவும் தெய்வயானையை முருகன் கரம்பிடித்தார்.

**கருதிவிழி விருந்தருந்தக் கண்ணிறைந்த**
**மேனியான் கைந்நீர் வார்ப்பத்**
**தருதியெனக் கையேந்திப் பரிதிமதி**
**விளக்கேந்தத் தந்தி மாதை**
**வருதியெனக்கைப்பிடித்துப் பரங்கிரியின்**
**மணந்தவனை வணக்கம் செய்வாம் (திருப்பரங்கிரிபுராணம், துதி)**

முருகனின் இத்திருமண நாள் பங்குனி உத்திரநாள். இந்நாளை பெரியதிருவிழாவாக பிரமோத்சமாக இன்றும் கொண்டாடி மகிழ்கின்றனர். மேலும், இத்திருத்தலம் பற்றி,

**கொடி நுடங்கு மறுகிற் கூற் குடாஅது**
**பல்பொறி மஞ்ஞை வெஞ் கொடி உயரிய**
**ஒடியா விழாவின் நெடியோன் குன்றம் (அகம்.149, 12-16)**
**ஒன்னார்த்தார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற**
**வேன்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் (கலி. 27)**

எனத் தமிழ் இலக்கியங்களில் திருப்பரங்குன்றின் பெருமையும்,ஆலயச்சிறப்பும், முருகனின் அருளும் குறித்து உரைப்பனவற்றைக்காணமுடிகின்றது.

**முடிவுரை**

ஆறுமுகமும் பன்னிரு கண்களும் கொண்டு அருள்புரியும் முருகப்பெருமான் திருபரங்குன்றத்தில் திருமணம் கோலம்பூண்ட செய்தியை இக்கட்டுரை தெரிவிக்கின்றது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 5, Issue 1, November 2024** **E-ISSN: 2583-0880**

முருகன் அசுரர்களை அழித்து தேவர்களை விடுவித்ததன் பலனாய் தேவேந்திரனான இந்திரன் தன் மகளை கொடுக்க மணமுவந்து அவரை மணமுடிக்க முருகன் உடன்பட்டு தேவர்களும் முவரும் அருளாசி வழங்க தாய் தந்தையர் ஆசீர்வாதம் வழங்க முருகன் தெய்வயானையை மணமுடிக்க உருவாக்கப்பட்டதே இத்தலமாகும். இத்தலத்தில் வந்து வேண்டுவோர் வேண்டுவது குறைவின்றி நடைபெறும் என்பது முருக பக்தர்களின் நிலைபேறுடைய நம்பிக்கை இவற்றை பற்றிய செய்திகளை இக்கட்டுரை எடுத்துரைத்தது.

**குறிப்புகள்**

[1] அருணகிரிநாதர். *திருப்புகழ்* (மூலமும்-உரையும்). சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
[2] *அகநானூறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[3] *கலித்தொகை*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[4] *குறிஞ்சிப்பாட்டு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[5] *திருமுருகாற்றுப்படை*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[6] *பரிபாடல்*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[7] *புறநானூறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[8] நிரம்பஅழகியதேசிகர். *திருப்பரங்கிரி புராணம்*. மீனலோசனி அச்சியந்திரசாலை, மதுரை, 1928.
[9] புலியூர் கேசிகன். *பரிபாடல்* (மூலமும் உரையும்). சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
[10] முனைவர்சிவ. திருச்சிற்றம்பலம். *திருமுருகன் கலைக்களஞ்சியம்*. திருவரசு புத்தக நிலையம், சென்னை, 2004.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 5, Issue 1, November 2024 E-ISSN: 2583-0880

# Deities in Folk Worship

**V. Merina Maju**, Reg No. - 241131501027, Ph.D Researcher of Tamil, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785
**Dr. A. Ponnammal**, Associate Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785
**DOI: 10.5281/zenodo.14498291**

## Abstract

*The details about the folk deity worship of ancient Tamilakam can be seen from the Sangam Age. The modern day historians call this worship system as Tamil religion that existed before the arrival of the Aryans and so called Dravidian system in Tamilnadu. One of the greatest Tamil scholars Vidyanandan defines the folk deities found in Sangam literature as minor deities. The people of the Sangam Age believed that God resides in rain, water and trees. It is seen in the 199th song of "Purananooru". The Nadukal worship mentioned in Sangam literature is one of the notable forms of folk deity worship in Tamil Nadu. In the Kailai Yaga, Lord Shiva ordered the Devas to create new deities on Mount Kailash. So, the characteristics of the native deities born in the sacrifice are shown ably in the Tamil myths and their appearance is similar to that of a human. There are 186 deities in the Nattar worship of Tamil Nadu. It is also notable that Tamil people express their gratitude to the native deities who removed the sufferings of the people in different ways. It is possible to see that Tamil people believe that the deity Amman can cure diseases such as smallpox and many folk believes like this on certain diseases. Therefore, this research article plans to do a study on the folk deities revered in folk worship.*

**Keywords:** Deity, Folk Worship, Nattar Worship, Tamil Culture.

## References

[1] Lourdes, The. *Nattar Vazhakatriyal Sila Adippadaigal*. First edition 1997. Nattar Vazhakatriyal Maiyyam, Thooya Saveriyar Kalluri, Palayamkottai - 627002.
[2] Lourdes, The. *Nattar Vazhakatriyal Sila Adippadaigal*. Fifth edition 2016. Nattar Vazhakatriyal Maiyyam, Thooya Saveriyar Kalluri, Palayamkottai - 627002.
[3] Professor Karuppasamy Nee. Va. Tarapuram Nattupura Deivangal. Kavya Publishing House, Chennai-600024.
[4] Sakthivel. Su. *Nattupuraiyal Aaivu*. Manickavasagar Pathipagam, Chennai - 108.
[5] Perumal. A. Ka. *Deivangal Mulaikkum Nilam*. Tamilini Pathipagam, Chennai-14, 2003.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 5, Issue 1, November 2024** **E-ISSN: 2583-0880**

# நாட்டார் வழிபாட்டில் தெய்வங்கள்

**வா. மெரினா மஜு**, பதிவு எண்: 241131501027, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785**
**முனைவர் A. பொன்னம்மாள்**, இணைப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785**
**DOI: 10.5281/zenodo.14498291**

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்டைய தமிழகத்தின் நாட்டார் தெய்வ வழிபாடு குறித்த செய்திகளை சங்க காலத்தில் இருந்தே தொடர முடிகிறது தமிழகத்திற்கு ஆரியர் வருவதற்கு முன்பே இருந்த இந்த வழிபாட்டு முறையை திராவிட சமயம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர் திராவிட சமயம் என்பதை ஒரு வசதிக்காக சொல்லாகவே நாம் கருதலாம். ஈழத்து பேராசிரியர் சு. வித்யானந்தன் சங்க இலக்கியங்களில் காணப்படும் நாட்டார் தெய்வங்களை சிறு தெய்வங்கள் என்று வரையறுக்கிறார். 'சங்க கால மக்கள் மழை, நீர், மரம்ஆகியவற்றில் கடவுள் உறைந்திருப்பதாக நம்பினர்' என்று கருத்து புறநானூற்றில் (199) குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் நடுகல் வழிபாடு தமிழக நாட்டார் தெய்வ வழிபாட்டில் குறிப்பிடத்தக்க ஒன்று. கயிலை வேள்வி என்னும் வேள்வியில் கயிலை மலையில் சிவன் புதிய தெய்வங்களை படைக்க விரும்பி தேவர்களிடம் ஆணையிட்டார். என்ற கருத்து பல பாடல்களில் விளக்கமாக வருகிறது. எனவே, வேள்வியில் பிறக்கும் நாட்டார் தெய்வங்களின் பண்புகளும் தன்மைகளும் பெருநெறி தன்மையுடன் காட்டப்பட்டாலும் அவற்றின் தோற்ற வருணனை மனித தோற்றத்தைப் போலவே அமைந்துள்ளது. நாட்டார் வழிபாட்டில் 186 தெய்வங்கள் குறித்தசெய்திகள் இடம் பெற்றுள்ளன. மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைப் போக்கிய நாட்டார் தெய்வங்களுக்கு மக்கள் தங்களின் நன்றி கடன்களை பல்வேறு விதமாக செலுத்துவது குறிப்பிடத்தக்கது. அம்மை நோய் போன்ற நோய்கள் தெய்வத்தால் நீங்க படுவதை அம்மன் தெய்வத்தால் நீங்க பெறுதலை மக்கள் நம்புதலை அறிய முடிகிறது. இத்தகைய சிறப்பு மிக்க நாட்டார் வழிபாட்டில் தெய்வங்களை இந்த ஆய்வு கட்டுரை குறிப்பிடுகின்றது.*

